தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற விழுப்புரம் மாவட்டத்திலே, சின்ன சேலம் வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 2-6-2015 அன்று திறந்து வைக்கப்பட்டது. அதேபோல, விழுப்புரம் மாவட்டத்திலே 241 கிராம நிருவாக அலுவலகங்களைப் புனரமைக்க ஆணை வெளியிடப்பட்டு, 202 கிராம நிருவாக அலுவலகங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோன்ற ஒரு நிலை அங்கேயிருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆய்வு செய்து, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 70, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. மாரியப்பன் கென்னடி, மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

70—

கூடுதல் கட்டடம்

***1603—திரு. சோ. மாரியப்பன் கென்னடி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2016 ஆகஸ்ட் 16]

மானாமதுரை தொகுதி, மானாமதுரை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மானாமதுரை தொகுதி, மானாமதுரை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குத் தேவையான கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் நபார்டு நிதி உதவித் திட்டத்தின்மூலம் ஏற்படுத்தித் தர, தேவை மற்றும் நிதிநிலைக்குட்பட்டு பரிசிலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. மாரியப்பன் கென்னடி அவர்கள்.*

திரு. சோ. மாரியப்பன் கென்னடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கம். திராவிடப் பெருங்கோயிலின் தென் திசை தீபம், தமிழகத்தைக் காக்கவந்த தாயுருவ குலசாமி, "வலியது வாழும், எளியது வீழும்" என்ற தத்துவத்தை உடைத்தெறிந்த தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன்.*

மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, மானாமதுரையில் அமைந்துள்ள அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 1,650 மாணவியர்கள் பயின்று வருகிறார்கள். 60, 70 கிராமங்களிலிருந்து பள்ளிக்கு வந்து பயில்கின்றனர். பன்னிரெண்டாம் வகுப்பில் மட்டும் 400 மாணவிகளும், பத்தாம் வகுப்பில் மட்டும் 250 மாணவியர்களும் படித்துவரும் மிகப் பெரிய பள்ளிக்கூடமாகும். நேற்று நடந்த சுதந்திர தின விழாவில்கூட மாவட்டத்திலேயே சிறந்த பள்ளியாகத் தேர்வு செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து விருது பெற்ற பள்ளியாகும். இப்பள்ளியில், நபார்டுமூலம் கட்டடம் கட்டித்தருவதற்கு பரிசீலனை செய்யப்படும் என்று கூறிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்று கட்டிக் கொடுக்கவும் அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதியிலுள்ள, மானாமதுரை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியானது, 1988 ஆம் ஆண்டு உயர் நிலைப் பள்ளியிலிருந்து மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டு, செயல்பட்டு வருகிறது. இப்பள்ளியில், 1,634 மாணவியர்கள் பயின்று வருகின்றனர்; 54 ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர். 1.25 ஏக்கர் நிலப்பரப்பில் இப்பள்ளி அமைந்துள்ளது. இப்பள்ளியில் 22 வகுப்பறைகள், 2 அறிவியல் ஆய்வகங்கள், 7 யூனிட் கழிப்பறைகள் மற்றும் போதுமான குடிநீர் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இப்பள்ளிக்கு நபார்டு கடன் உதவித் திட்டத்தின்மூலம் ரூ.75 இலட்சத்தில், 12 கூடுதல் வகுப்பறைகள், மேல்நிலைப் பள்ளிக்கான அறிவியல் ஆய்வகம் மற்றும் அனைத்து அடிப்படை வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் 2015-2016 ஆம் கல்வியாண்டில் 26.12 இலட்சம் ரூபாயில். இப்பள்ளியில் கூடுதலாக 4 வகுப்பறைகளுக்கான கட்டடப் பணிகள் பொதுப் பணித் துறைமூலம் மேற்கொள்ளப்பட்டு, தற்சமயம் பணிகள் முடிவடையும்தருவாயில் உள்ளன. மேலும், இப்பள்ளிக்குக் கூடுதலாகத் தேவைப்படும் வகுப்பறைகள் நபார்டு நிதி உதவித் திட்டத்தின்கீழ் ஏற்படுத்தித் தருவது குறித்து மாணவிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் கள ஆய்வு மேற்கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2016 ஆகஸ்ட் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. மாரியப்பன் கென்னடி அவர்கள்.

திரு. சோ. மாரியப்பன் கென்னடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருப்பாசேத்தி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு இதுபோலவே கூடுதல் கட்டடங்கள் தேவைப்படுகின்றன. இதையும் தயவுகூர்ந்து கவனத்தில்கொண்டு, கட்டித் தர அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கடந்த 5 ஆண்டு பொற்கால ஆட்சியில், மானாமதுரை சட்டமன்றத் தொகுதியில் ஒரு தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளியாகவும்; 8 நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளாகவும் மற்றும் 2 உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டு செயல்படுகின்றன. மானாமதுரை சட்டமன்றத் தொகுதியில், அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ், 6.72 கோடி ரூபாயில் பள்ளிகளுக்குத் தேவையான வகுப்பறைகள், ஆய்வகங்கள், நூலகம், மாணவ, மாணவியர்களுக்குக் கழிப்பறை வசதி, குடிநீர் வசதி ஆகியவற்றிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்தொகுதியிலுள்ள முனைவென்றி என்ற கிராமத்திலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் 8 வகுப்பறைகள், 1 ஆய்வகம் மற்றும் 2 கழிப்பறைகள் கட்டும் பணிகள் நபார்டு திட்டத்தின்கீழ் ரூ.175.430 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, 2015-2016 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளன. அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் மேலப்பசலை, மூங்கிலூரணி, கல்குறிச்சி மற்றும் பறையன்குளம் ஆகிய உயர்நிலைப் பள்ளிகளுக்கு புதிய கட்டடங்கள் ரூ.1.68 கோடியில், ஒவ்வொரு பள்ளிக்கும் 4 வகுப்பறைகள், ஆய்வகம், நூலகம், தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர் ஓய்வறைகள், கணினி அறை, மாணவ மாணவிகள் கழிப்பறைகள் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக

[2016 ஆகஸ்ட் 16

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட திருச்செந்தூரிலுள்ள செந்தில் முருகன் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் ஏறக்குறைய 960 மாணவிகள், தமிழ் மற்றும் ஆங்கில வழிக் கல்விமூலம் 40 ஆசிரியர்களைக்கொண்டு கல்வி பயின்று வருகின்றனர். இப்போது அந்தப் பள்ளியினுடைய மேற்குப் பகுதியிலுள்ள ஓட்டுக் கட்டடம் சேதமடைந்து, கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்றது. அந்த ஓட்டுக் கட்டடத்திற்குப் பதிலாக, புதிய கட்டடம் கட்டித் தர மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமருகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கடந்த 5 ஆண்டுக்கால பொற்கால ஆட்சியில், தமிழ்நாட்டிலுள்ள பள்ளிகளுக்கு சிறந்த உட்கட்டமைப்பு வசதிகள் வழங்குவதன்மூலம் மாணவர்களின் வருகை அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல், கல்வி அறிவு சதவிகிதமும் அதிகரிக்கும் என்பதன் அடிப்படையில், உட்கட்டமைப்பு வசதிகளுக்காக அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் ரூ.1,002.11 கோடி நிதி; நபார்டு வங்கிக் கடனுதவித் திட்டத்தின்மூலம் ரூ.1,006.26 கோடி நிதி மற்றும் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்மூலம் ரூ.1,617.68 கோடி நிதி என ஆக மொத்தம் ரூ.3,626.05 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, பள்ளிக் கல்வித் துறையில் மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வரலாற்றுச் சாதனை படைத்து வருகிறார்கள் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் கோரியுள்ள*

2016 ஆகஸ்ட் 16]

கூடுதல் அடிப்படை வசதிகள் செய்து தருவது தொடர்பாக உரிய ஆய்வுகள் மேற்கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, நிறைவேற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கீழ்பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதியிலே சடையனோடை கிராமத்தில் கடந்த ஆண்டே 1¼ கோடி ரூபாயிலே மேல்நிலைப் பள்ளிக்குக் கட்டடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டு, சென்ற முறை டெண்டர் விடப்பட்டு கட்டப்படவில்லை. இரண்டாம் முறையாக டெண்டர் விடப்பட்டும், இன்றைக்கும் அந்தப் பள்ளிக்குக் கட்டட வசதி செய்யப்படாமல் இருக்கின்றது. எனவே, கல்வித் துறையும், வருவாய்த் துறையும் இணைந்து, தொழில் துறையில் ஒற்றைச் சாளர முறையில் எப்படி அனுமதி வழங்குகிறார்களோ, அதுபோன்று, இப்படிப்பட்ட பள்ளிக் கட்டடங்களைக் கட்டுவதற்கு அனுமதியை வழங்கிட, அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். அதேபோல, என்னுடைய தொகுதிக்குட்பட்ட இனாம்காரியந்தல் என்கின்ற அந்தக் கிராமத்திலே உள்ள மேல்நிலைப் பள்ளிக்கு 5 ஆண்டுக் காலமாக கட்டடம் கட்டப்படவில்லை. அதேபோல, ஆய்வுக்கூடம் மற்றும் கணினி அறையெல்லாம் இல்லாமல் இருக்கின்றன. அவற்றை இந்த ஆண்டாவது இந்த அரசு நிறைவேற்றித் தர ஆவன செய்யுமா என அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கின்ற கூடுதல் அடிப்படை வசதிகள் தொடர்பான கோரிக்கைகள் குறித்து உரிய ஆய்வுகள் மேற்கொண்டு, மாண்புமிகு*

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று நிறைவேற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 71, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ஆறுமுகம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

71—

அடிப்படை வசதிகள்

***1423 திரு. பா. ஆறுமுகம்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கந்தர்வகோட்டை தொகுதி, குன்றாண்டார் கோயிலுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"அமைதி, வளம், வளர்ச்சி" என்றத் தாரக மந்திரத்துடன் செயல்பட்டுவரும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், தமிழகத்தினை அனைத்துத் துறைகளிலும் முதலிடத்திற்குக் கொண்டுவர எடுத்த ஆற்றல்மிக்க நடவடிக்கைகளினால், 2014 ஆம் ஆண்டைத் தொடர்ந்து, 2015 ஆம் ஆண்டிலும் நமது மாநிலம், உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையிலும், வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வருகையிலும், இந்தியாவில் முதல் இடத்தினை இரண்டாவது முறையாகப் பெற்றுள்ளது என்பதை இப்பேரவைக்குத் தெரிவிப்பதில் பெருமைகொள்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*